ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

# தீபச் செல்வனின் கவிதைகளில் இயற்கை அழிவுகள்

சா.பி.ரூபா
பதிவுஎண்: 18213114022034
முனைவர்பட்ட ஆய்வாளர்
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம். மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம், திருநெல்வேலி

முனைவர்.செ.செல்வகுமார்
நெறியாளர், இணைப்பேராசியர்,
தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வு மையம்
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம், மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

=====================================================================

ஆய்வுச் சுருக்கம்

தீபச்செல்வன் தனது கவிதைகளில் ஈழதேசத்து அழிவுகளைக் குறித்து குறிப்பிடும் போது இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார். கடவுளின் படைப்பில் அழகை உணர்த்தும் உன்னதமான ஒன்று இயற்கை ஆகும். இலங்கையில் ஏற்பட்ட பயங்கரமான யுத்தம் மற்றும் அதற்குப் பிறகான திட்டமிட்ட குடியேற்றம் போன்றவை இலங்கை தேச மக்களை மாத்திரமல்ல இயற்கை வளங்களையும் மிகவும் அதிகமாகச் சீரழித்தது. இயற்கையின் வரங்களான மரம், செடி, கொடி போன்ற தாவர வகைகளையும், விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்களையும், குளம், கிணறு, கடல் போன்ற நீர் நிலைகளையும் இலங்கை இராணுவமானது கொடூரமாகக் கொன்று தின்றிருக்கிறது.

இலங்கையில் வாழும் மக்களுக்கு மட்டுமின்றி இயற்கைக்கும் ஈழத்தில் பாதுகாப்பில்லாத இக்கட்டான நிலைமை இருந்துள்ளதையும், செழுமை மிகுந்த ஈழதேசம் வறண்ட நிலையில் மாறிய இயற்கை அழிவுகளையும் தீபச்செல்வன் நமக்கு இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள கவிதைகளின் வாயிலாக நமக்கு இயற்கையாக படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

## முன்னுரை

இலங்கை இராணுவமானது இயற்கைக் காடுகளையும் பயன்தரும் மரங்களையும் அழித்து இப்பிரதேசங்களின் சுற்றுச் சூழலையும் பெருமளவில் அழித்தது. இராணுவ நடவடிக்கையின் போது உருவாக்கப்பட்ட மண் அணை, வீதிப் பாதுகாப்பு, புதிய பாதைகள் அமைத்தல், இராணுவ ஆட்லறிப் பீரங்கித் தளங்களை உருவாக்குதல், புதிய இராணுவ முகாம்களை அமைத்தல் போன்றவற்றிற்காகக் காடுகளை அழித்தனர். இப்படியாக அழிக்கப்பட்ட இயற்கை வளங்கள் குறித்து தீபச்செல்வனின் கவிதைகள் வழிநின்று இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

## இயற்கை அழிவுகள்

தீபச்செல்வன் தனது கவிதைகளில் ஈழ தேசத்தின் இயற்கை வளங்களையும் பாதுகாப்பின்றி மடிந்து போன பல நிகழ்வுகளையும் மையப்படுத்திக் கூறியிருக்கின்றார்.

இராணுவப் படைகளின் தீவிரமானத் தாக்குதலினால் இயற்கையின் படைப்புகளான கொய்யா மரங்களும், தென்னை மரங்களும் தங்களது நகரங்களை விட்டுப் பின்வாங்கிச் சென்றன என்பதை “கைப்பற்றப்பட்ட நகரம் பற்றியெழுகிற துயரம்” என்னும் கவிதையில்

“கொய்யா மரங்கள்
ஆனந்தநகரைவிட்டு பின்வாங்கின
தென்னை மரங்கள்

பாரதிபுரத்தைவிட்டு பின்வாங்கின"[1]
என்று கூறியிருக்கிறார்.

மனித இனங்களைத் தின்று கொழுத்துப் போன ஈழத்தின் யுத்தமானது அடுத்து ஈழத்தின் வீதியையும் கோபம் மிகுந்த இயற்கையான கடலினையும் பலியிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு மணல்கள் அஞ்சுவதாக "மற்றொரு நகரத்தை நோக்கி நடைபெறுகிற படையெடுப்புகள்" என்னும் கவிதையில்,

"மனிதர்களை நெடுநாளாய் தின்று கொளுத்த யுத்தத்திடம் வீதியும் கடலும் முதலில் பலியிடப்படுவது கண்டு மணல்கள் அலைகின்றன"[2]

என்று ஈழத்தின் அழிவில்லா இயற்கைகளையும் இராணுவம் அழித்துள்ளது என்பதைத் தெரியப்படுத்தியுள்ளார். மேலும் காடுகளில் தீ பரவி முழுவதுமாக எரிந்து நாசமாகியது. குளம், கிணறு போன்றவைகள் அழிந்து போயின. ஆடு, மாடு, கோழி போன்றவைகள் அழிக்கப்பட்டன என்றும் கவிஞர் இக்கவிதைகளில் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் இதேக் கவிதையில்,

"காய்கறிகளை வெட்டி வீசுகிற
படைகள் கிழங்குகளை பிடுங்கி எறிந்தனர்
பூக்கள் மறுக்கிற பூமரங்களை
படர்ந்த கொடிகளை வேரில் சுட்டனர்"[3]

என்று ஈழத்தின் உணவு வகைகளையும் பூ மரங்களையும் படைகள் அழித்துள்ளனர் என்கின்றார் ஆசிரியர்.

24.12.2008 அன்று குஞ்சுப்பரந்தன் என்னும் பகுதியில் நடந்த விமானத் தாக்குதலில் மாதா கோவிலின் அடிவாரத்தில் தங்கியிருந்த எண்பத்து ஐந்து மாடுகள் பலியான சம்பவத்தினை "மாதா அழைத்து வைத்திருந்த மாடுகள்" என்னும் கவிதையில்,

"கொம்பு முளைத்த மாடுகளிடம்
எந்தத் துவக்குளும் இல்லை
இராணுவ உடைகளையும்
அணிந்திருக்கவில்லை
வெடித்துச் சிதறிய குண்டு
மாடுகளை அள்ளி எடுத்த பட்டியில்
துணைக்கு ஒருநாய் மட்டும் நிற்கிறது".[4]

என இயற்கையின் படைப்பாகிய மாடுகள் குண்டு வெடிப்பினால் தலை துண்டிக்கப்பட்டு இறந்து போயிருக்கின்றதை விவரிக்கின்றார்.

போராளிகள் படைகளை நோக்கிச் சுடுகின்ற போது அவர்களின் மனதில் அந்நகரில் நடமாடுகின்ற மக்களும் அவர்களது பசுமையான கிராமங்களும் இருந்தன என்பதை "போர்க்களத்தில் சிதைந்த கிராமமும் கிடந்த உடல்களும்" என்னும் கவிதையில்,

"படைகளை நோக்கி சுடுகிற
போராளிகளின் மனங்களில் இருந்தன
பசுமையான கிராமங்களும்
அங்கு நடமாடித்திரிகிற சனங்களும்"[5]

என்று கூறியிருப்பதிலிருந்து இயற்கை நிறைந்த பசுமையான கிராமங்கள் ஈழத்தில் இருந்துள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

பழங்கள் காய்த்து கனிகின்ற மரங்கள் அழிக்கப்பட்டதை "முன்பொரு காலத்தில் இந்த நிலம் எங்களிடமிருந்தது" என்னும் கவிதையில்,

"எந்தப் பறவைகளும் வந்தமராத மரத்தில்
காய்த்த கிளைகளில்
பழங்கள் காய்த்து கனியும் என்று நம்பியிருந்தோம்
அம்மா அந்த பறவைகளை எங்கேனும் கண்டாயா
அந்த மரம் நீண்ட காலங்களாய் பட்டுப் போயிருந்தது
தலைகளில் ஒடிந்து விழுந்து கொண்டிருக்கிற முற்றத்தில்
இப்பொழுது எந்த தடிகளும் இல்லை"[6]

என்று மரங்கள் அழிக்கப்பட்டுப் பட்டுப் போயிருந்ததைத் தெரியப்படுத்தியுள்ளார்.

"பேய் கொன்ற நிலம்" என்னும் கவிதையில், நாவல் மரத்தின் பூக்களை அழித்துக் கிளைகளை உடைத்துத் தின்கின்றனர் இராணுவத்தினர் என்னும் விரட்டுகின்ற பொம்மை என்பதை,

"நாவல் மரத்தின் பூக்களை வெகுளிகள்
அழித்துக் கொட்டுகின்றன
கிளைகளை உடைத்துத் தின்று மீண்டும்
சிரிக்கிறது சிவப்புடையணிந்த வெகுளி"[7]

என்று இராணுவத்தினர் இயற்கையை அழித்ததைச் சுட்டியிருக்கின்றார்.

மாமரம் மற்றும் வேப்ப மரத்தின் நிழலில் பூத்தபூக்கள் எங்கே? கோழிகள் உறங்குகின்ற நந்தியாவட்டை மரத்தின் நிழல் எங்கே? முற்றத்தில் படர்ந்திருந்த மல்லிகைப் பந்தலின் நிழல் எங்கே? என்று வீட்டின் முன்பு காணப்பட்ட இயற்கைகள் அழிக்கப்பட்டதை "கூடாரநிழல்" என்னும் கவிதையில்,

"மாமரத்தின் நிழலில் பூத்தபூக்கள் எங்கே?
வேப்பமரத்தின் நிழலில் பூத்தபூக்கள் எங்கே?
கோழிகள் உறங்கும்
நந்தியாவட்டை மரத்தின் நிழல் எங்கே?"[8]

என்று குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

இலங்கை தேசம் மிகவும் செழுமை நிறைந்த ஒரு அழகிய தேசமாகும். இங்கு இயற்கை வளம் நிறைந்து காணப்பட்டது. இலங்கை இராணுவத்தின் கோரத் தாக்குதலினால் இலங்கை தேசம் பெரும் அழிவுக்குள்ளான போது விவசாய நிலங்களும் பெரும் அழிவுக்கு உட்பட்டது. ஈழ மக்கள் தங்களது உறவுகளுடன் இயற்கையையும் இழந்து தவித்துள்ளனர். இவைகளை மேற்குறிப்பிட்டிருக்கின்ற கவிதைகள் ஒவ்வொன்றும் நமக்கு விரிவாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

அடிக்குறிப்புகள்

1. தீபச்செல்வன், ஆட்களற்ற நகரத்தை தின்றமிருகம், ப.21, 2009 உயிர்மை பதிப்பகம், சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை – 600 018.
2. மேலது, ப.22
3. மேலது, ப. 25
4. மேலது, ப.27
5. மேலது, ப. 31
6. தீபச்செல்வன், பெருநிலம், ப. 24, 2011, காலச்சுவடு பதிப்பகம், 669 கெ.பி.சாலை, நாகர்கோவில் – 629 001.
7. மேலது, ப. 57
8. தீபச்செல்வன், கூடாரநிழல், ப.74, 2012 உயிர்மை பதிப்பகம், சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை – 600 018.

********* ********* ********** ********* ********* ********** ********* **********